**08.04.2025**

**சிசி.44/2024** அ.சா.1 கிஷோர் (A2, A3 present. A1 absent. Petition U/s.355 of BNSS filed through Online and allowed)

(சாட்சி மனுவின்பேரில் ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

1) இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பஜார் என்றும் நிறைய கடைகள் உள்ளது என்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது சம்பவஇடத்தில் சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்கள். நானும் சாட்சிகள் கார்த்திக், ராமதாஸ், ரவிக்குமார், சந்தோஷ், பிரபு, ராஜ்குமார் ஆகியோர் இந்து முன்னணியை சேர்ந்தவர்கள் என்றால் சம்பவசமயத்தில் இந்து முன்னணியில் தான் மேற்படி சாட்சிகளும் இருந்தார்கள்.

2) சம்பவ இடமருகே கொலக்கம்பை போலிசாரின் புறநகர் காவல்நிலையம் உள்ளது என்றால் சம்பவ சமயத்தில் இல்லை. தற்பொழுது தான் உள்ளது. அன்றையதினம் மேற்படி கூட்டத்திற்கு போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து போலிசார் புகார் வாக்குமூலம் பதிவுசெய்தார்கள். வழக்கு தொடர்பாக நானோ எனது கட்சியை சேர்ந்தவர்களோ நேரடியாக காவல்நிலையம் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3) இவ்வழக்கிற்கு முன்பாக எங்களது இந்து முன்னணி அமைப்பிற்கும் எதிரிகளின் திராவிட கழகத்திற்குமிடையே பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு பிரச்சனை இருந்து அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் முடிவுற்றது என்றால் சரியல்ல. இதே வழக்கு சம்பவம் தொடர்பாக என் மீதும் கார்த்தி என்பவர் மீதும் ஒரு குற்றவழக்கு பதிவுசெய்யப்பட்டதென்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் கூட்ட நெரிசலில் கீழே விழுந்ததால்தான் ஏற்பட்டதென்றும் எதிரிகள் அடித்ததால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

4) புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் குறிப்பிட்டு என்ன வார்த்தைகள் பேசினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கியபோது விசாரித்ததோடு சரி. அதன் பின்னிட்டு

விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் எதிரிகள் இந்து மத கடவுள்களை அவமதிப்பதுபோல் எந்த ஒரு வார்த்தையும் பயன்படுத்தவில்லை என்றும் எதிரிகள் திராவிட கழகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எங்கள் அமைப்பிற்கும் மேற்படி கழகத்திற்குமிடையே உள்ள முன்விரோதம் காரணமாக பொய்புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்க்காமல் எங்கள் இயக்கத்தை சேர்ந்தவர்களையே சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்